TakafulMalaysia MyBulletin

| Publication | Tamil Malar | Section / Page | 5 | Date | 25 July 2021 |
|---|---|---|---|---|---|
| Headline | Takaful Provides Personal Protection For LPPSA Customers | | | | |


# தக்காஃபுல் மலேசியா தனது எல்பிபிஎஸ்ஏ உறுப்பினர்களுக்கு விபத்து பாதுகாப்பு காப்பீட்டை வழங்குகிறது

கோலாலம்பூர், ஜூலை 25–

மலேசியாவின் முதல் இஸ்லாமிய காப்பீட்டு நிறுவனமான தக்காஃபுல் மலேசியா அதன் பொது தகாஃபுல் நிறுவனமான பொதுத்துறை வீட்டுவசதி நிதி வாரியத்துடன் இணைந்து தனது எல்பிபிஎஸ்ஏ வாடிக்கையாளர்களுக்கு மலிவான விலையில் தனிப்பட்ட விபத்து பாதுகாப்பு காப்பீட்டை வழங்க திட்டமிட்டுள்ளது.

தக்காஃபுல் மலேசியாவின் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி டத்தோ ஸ்ரீ முகமட் ஹசன் காமில் கூறுகையில்," எல்பிபிஎஸ்ஏ வாடிக்கையாளர்களுக்கு எங்கள் புதிய தயாரிப்பான 'தகாஃபுல் myProtect' எனும் காப்பீடு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நடவடிக்கை நாங்கள் நீண்டகாலமாக நிறுவிய எங்கள் கூட்டணியில் மற்றொரு அடையாளத்தை குறிக்கிறது" என்றார்.

"தற்போது,பொதுத்துறைகளில் உள்ள பணியாளர்களுக்கு வழங்கப்படும் வீட்டு நிதியுதவிக்காக பல திட்டங்களை வழங்குவதில் நாங்கள் பெருமை அடைகின்றோம். எல்பிபிஎஸ்ஏவின் ஐ–பிரிஹாத்தின் திட்டத்தின் மூலம் எங்கள் 'தகாஃபுல் myProtect' எனும் காப்பீடு எல்பிபிஎஸ்ஏ வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

'தக்காஃபுல் myProtect' எனும் காப்பீட்டின் மூலம் வாடிக்கையாளர்கள் விபத்தினால் மரணம் ஏற்பட்டாளோ அல்லது விபத்தினால் படும் காயம் ஏற்பட்டாலோ ரிம.100,000 வரை பாதுகாப்பு உரிமத்தை கோர முடியும்.

"இதற்காக எல்பிபிஎஸ்ஏ வாடிக்கையாளர்கள் வருடத்திற்கு ரிம.100 மட்டுமே செலுத்த வேண்டும். இந்த கூடுதல் பாதுகாப்புத் திட்டத்திற்கு தற்போது அனைத்து எல்பிபிஎஸ்ஏ உறுப்பினர்களும் விண்ணப்பிக்க முடியும். "மேலும், இத்திட்டம் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது ஏற்படும் விபத்து காரணமாக உயிரிழந்த வாடிக்கையாளர்கள் கூடுதல் உதவிகளும் செய்யும். மருத்துவ செலவுகள், ஆம்புலன்ஸ் கட்டணம், இறுதிச் செலவுகள், கொடுப்பனவு ஆகிய உதவிகளை உற்றுப்பினர்கள் இத்திட்டத்தின் வழி பெறலாம். ஏடிஎம் கொள்ளை காரணமாக இழப்புகளை சந்தித்த உறுப்பினர்களும் இத்திட்டத்தின் மூலம் தங்கள் உரிமங்களை பெறலாம்" என்றார் அவர்.

"இது எல்பிபிஎஸ்ஏ போர்ட்டல் மூலம் உறுப்பினர்கள் பதிவுச் செய்யலாம். எல்.பி.பி.எஸ்.ஏ வாடிக்கையாளர்கள் ஒரு வெற்றிகரமான விண்ணப்பத்திற்கு இ–சான்றிதழைப் பெறுவார்கள். மேலும் எங்கள் வாடிக்கையாளர் இந்த போர்டல் மூலம் இன்னும் பல தகவல்களை அறிந்துக் கொள்ளலாம். பிற விரிவான ஆன்லைன் பாதுகாப்புத் திட்டங்களுக்கு, எல்பிபிஎஸ்ஏ வாடிக்கையாளர்கள் கவர் ஆன்லைன் விற்பனை போர்ட்டலுக்கான எங்கள் அகப்பக்கத்தைப் பார்வையிடலாம் மற்றும் மோட்டார் காப்பீடு, மருத்துவ பாதுகாப்பு ஆகிய காப்பீடுகளை எங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்" என்று டத்தோ ஸ்ரீ ஹசன் கமில் முடிவில் கூறினார்.